1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதியில் இருக்கக்கூடிய மூங்கில்களை சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்து கொடுத்தாலும் கொடுக்க முடியாது. நாங்களே பார்த்து எடுப்பதற்கும் வாய்ப்பு இல்லை. அதை வனத் துறையினுடைய அனுமதி பெற்று தான் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சமீப காலத்திலே, கடந்த 3 ஆண்டுக் காலமாக, வனத் துறையிலிருந்து மூங்கில் பெறுவதற்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் மிகக் கடுமையான முறையிலே நாங்கள் போராடி அதைப் பெற்றிருக்கிறோம். அதேபோன்று, ஆற்று படுகையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதை பொதுப் பணித்துறையிலே இருந்துபெற்று தான், அவர்களுடைய அனுமதியோடு தான் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை எளிய முறையிலே பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. நாங்கள் ஏற்கெனவே முயற்சி செய்திருக்கிறோம். இருந்தாலும் முயன்றுகொண்டே இருக்கிறோம். அது சாத்தியப்படக்கூடிய நேரத்திலே, இது போன்ற தொழில் கூடம் அமைப்பதற்கு வாரியத்தின்மூலம் ஏற்பாடு செய்யப்படும் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

482—

மருவத்தூரில் மருத்துவமனை அமைத்தல்

**26745—திரு. ஆர். தங்கராஜ்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, மருவத்தூர் கிராமத்திற்கு பகுதி நேர மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

492—

சுண்ணாம்புக்கல் வெட்டுவதற்குத் தடை

**25958—திருமதி ரமணி நல்லதம்பி:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் இடிந்தகரை பகுதியில் இந்தியா சிமெண்டு நிறுவனம்

சுண்ணாம்புக்கல் வெட்டுவதால் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் வட்டம், விஜயாபதி கிராமத்தில், திருவாளர்கள் இந்தியா சிமெண்ட் நிறுவனம் அரசின் அனுமதி பெற்று தனது சிமெண்ட் ஆலைக்காக சுண்ணாம்புக்கல் மற்றும் சுக்கான் கற்களை வெட்டி எடுத்து வருகின்றது. இதனால் சுண்ணாம்புக்கல் குவாரியிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இடிந்தகரையிலுள்ள மீனவர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) மேற்கூறிய காரணத்தால், இக்கேள்வி எழவில்லை.

497—

விருதுநகர் வளர்ச்சிக்கு உலக வங்கி கடனுதவி

*19363—திரு. **சஞ்சய் ராமசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விருதுநகர் வளர்ச்சிக்காக உலக வங்கியிடம் கடனுதவி கோரி தயாரிக்கப்பட்ட திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு.டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): விருதுநகர் நகராட்சிக்கு உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் தயாரிக்கப்பட்ட 136.41 இலட்ச ருபாய்க்கான திட்டம் திட்ட மேலாண்மைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]